# சுதேச கீத

# தமிழ் அர்த்தம்.

சென்னை

ஹிந்தி ஸாஹித்திய ஸம்மேளன் பிரசார

காரியாலயத்தாரால வெளியிடப்பட்டது.

விலை அணா ஒன்று.

PRINTED BY

C. MUNISAWMY MUDALIAR, AND SONS,

AT "SIVAKAMI VILASA" PRESS,

41, LINGHA CHETTY, ST., MADRAS.

# முகவுரை.

முதலில் பாட்டு மாத்திரம் போட்டதற்கு காரணம் சென்னை மாகாணகாங்கிரஸ் ஸமயத்தில் பாட்டு புஸ்தகம் எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்ற ஆவல் தான். மூலம் மாத்திரம் போட்ட பிறகு ஜனங்கள் அர்த்தமும் மிக் ஆவலுடன் கேட்க ஆரம்பித்தார்கள். மகாநாடு இப்பொழுது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸௌகரியத்தால் இப்போது இதை வெளியிடுகிறோம். ஸ்ரீ கவீந்தரர் ரவீந்திரநாதர், பங்கிம் பாபு, ஸ்ரீமதி ஸாரளாதேவி, ஸௌதராணி முதலியவர்களுடைய தேச பக்தி ரஸம் நிறைந்த பாட்டுகளை மொழி பெயர்ப்பது ஸாதாரண பாஷா ஞானமுள்ள எம்போலொற்றவர்களின் சக்திக்கு மேலான காரியமான போதிலும் ஏதோ தெரிந்த வரையில் செய்திருக்கிறோம். பிழை இருப்பின் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஹிந்தி. ஸா. ஸ. பிரசார

காரியாலயத்தார்.

## வந்தேமாதரம்.

நல்ல ஜலத்தையும், கனியையும், குளிர்ந்த காற்றையும், பசுமையான பயிர்களையு முடையவளாயும், வெண் நிலவால் புளகிதமாயிருக்கும் ராத்திரியாலும், பூத்துப் பழத்தோடுங் கூடிய மரங்களாலும் அழகை யுடையவளாயும், சிரித்த முகத்தை யுடையவளாயும், சுகத்தையும், வரத்தையும் கொடுக்கக் கூடியவளுமாகிய பாரத மாதாவுக்கு வந்தனம். க

அநேக கோடி ஜனங்களின் ரூபமாக கல கலவென்று சப்தித்துக் கொண்டும் கோடிக் கணக்கான ஜனங்களின் ரூபத்தில் வாளைத் தரித்துக் கொண்டுமிருக்கும்பொழுது உன்னை, ஏ தாயே! யார் பல மற்றவளென்று சொன்னார். அதி பலத்தை யுடையவளே, கரையேற்றக் கூடியவளே, பகைவர் கூட்டத்தைத் தடுக்கக் கூடியவளே, உனக்கு வந்தனம். உ

நீயே கல்வி, நீயே தர்மம், நீயே அன்பு, நீயே உண்மை, நீயே சரீரங்களிலுள்ள பிராணன், என் கையில் இருப்பது உன்னுடைய சக்தி, என் ஹ்ருதயத்தில் உன்னுடைய பக்தி, ஒவ்வொரு கோவிலிலும் உன்னுடைய மூர்த்தியே. ௩

நீயே துர்க்கை, நீயே தசாவதாரி, நீயே தாமரையில் வசிக்கும் லக்ஷ்மி, நீயே வாக்கு, கல்வியைக் கொடுக்கும் ஸரஸ்வதியும் நீயே, உனக்கு வந்தனம். லக்ஷ்மியாயும் மாசற்றவளாயும் நிகரற்றவளாயும்

நல்ல ஜலத்தையும், பழத்தையும், உடையவளாயுமிருக்கிற மாதாவாகிய உனக்கு வந்தனம். ௪

வங்கிம்சந்திரசட்டோபாத்தியாயர்.

---

## சுதேச கானம்.

ஜன சமூகத்தின் மனதிற்கு அதிகாரியே, பாரதத்தின் பாக்கியத்தை சிருஷ்டிக்கக் கூடியவளே, பஞ்சாப், ஸிந்து, குஜராத், மஹாராஷ்டிரம், திராவிடம், ஒரிஸா, வங்காளம், விந்தியாசலம், ஹிமயமலை, யமுனை, கங்கை, கொந்தளித்துக்கிளம்பும் சமுத்திரத்தின் அலைகளும், உன்னுடைய சுபமான பெயரைக்கொண்டே எழுந்திருக்கின்றன. உன்னுடைய சுபமான ஆசீர்வாதங்களைக் கேட்கின்றன. உன்னுடைய ஜயப்பாட்டுகளையே பாடுகின்றன. ஜன சமூகத்திற்கு ஜயத்தைக் கொடுக்கும் ஏ பாரத பாக்கியத்தையுண்டு பண்ணுகிறவளே உனக்கு ஜயமுண்டாகுக. ௧

எங்கும் பரவிய உன்னுடைய உதாரமான வாக்குடன் கூடிய அழைப்பைக் கேட்டு எப்போதும் ஹிந்து, பௌத்தர், ஸிக்கியர், பாரசீகர், மகம்மதியர், கிருஸ்தவர், எல்லோரும் கீழ்திசையிலிருந்தும் மேல்திசையிலிருந்தும் அன்பாகிற ஹாரத்தை எடுத்துக்கொண்டும் பாடிக்கொண்டும் வருகிறார்கள். ஜன சமுதாயத்தில் ஒற்றுமையை ஸ்தாபிக்கக்கூடிய ஏ பாரத பாக்கியத்தின் சிருஷ்டி கர்த்தாவே, உனக்கு ஜயமுண்டாகுக. ௨

யுக யுகமாக யாத்திரிகள் ஓடுகிறார்கள். பாக்ய சக்ரத்தின் ஸாரதி நீயே. நீயே ராப்பகலாய் சக்கர

த்திற்கு வழி காண்பிக்கிருய். தாழ்ச்சியும் முன்னேற்றமும் உன் வசத்தில் இருக்கின்றன. மகா கஷ்டமான காலத்திலும் உன்னுடைய சங்கு சப்தமே கேட்கிறது. நீயே ஸங்கடத்தி லிருந்தும், துக்கத்தி லிருந்தும் விடுவிக்கிறவள். ஜன சமுதாயத்திற்கு வழியைக் காண்பிக்கிற ஏ பாரத பாக்யத்தின் ப்ரும்மாவே, உனக்கு ஜயமுண்டாகுக. ௩

பயங்கரமான இருட்டுநிறைந்தஇரவிலும், தேசம் வருத்தத்தினல் மூர்ச்சை யடைந்தபோதும், உன்னுடைய சஞ்சலமற்ற மங்களமே விழித்துக்கொண்டிருந்தது. கெட்டசொப்பனத்திலும் ஆதங்கமான காலத்திலும், ஏ ஸ்நேக மூர்த்தியாகிய மாதாவே, நீயே காப்பாற்றினுய். ஜன ஸமூகத்தின் துக்கத்தை போக்கக்கூடிய ஏ பாரதபாக்கியத்தை சிருஷ்டிப்பவளே, உனக்கு ஜயமுண்டாகுக. ௪

ராத்திரி உஷக்காலமாய், உதய மலையில் சூரியன் உதிக்கப் போகிறுன். பக்ஷிகள் பாடுகின்றன. புதிய ஜீவனமிருதத்தோடு புண்ணியமான காற்றுவீசுகின்றது. உன்னுடைய கருணையாகிற அருணராகத்தில் தூங்கியிருக்கும் பாரதம்விழிக்கட்டும். உன்னுடைய பாதங்களில் நான் தலை வணங்குகிறேன். ஏ ராஜ்யங்களில் மேலான பாரதத்தின் பாக்யத்தை சிருஷ்டிக்கக்கூடியவளே உனக்கு ஜயமுண்டாகுக. ௫

ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூர்.

---

## மாத்ருவந்தனு (நாட்டு) தாய்க்கு வந்தனம்.

ஹே மாத்ரு பூமி! உன் பாதார விந்தங்களில் நான் தலை வணங்குகின்றேன். நான் உன் பாதங்களுக்கு காணிக்கையாக என் பக்தியையே கொண்டு வருகின்றேன். க

நீயே என் தலையில் சந்தனமாகவும், மார்பில் மாலையாகவும், நாவில் ஸங்கீதமாகவும் இருக்கிறாய். நான் உன் பெயரையே பாடுகின்றேன். உ

எதிலிருந்து ஸ்ரீராமன், கிருஷ்ணன் போன்ற புதல்வர் உண்டானார்களோ அந்த உன்னுடைய தூளியை நான் சிரஸில் ஏற்றுக் கொள்கிறேன். ௩

யாருடைய பாததூளியை சாப்பிட்டு கர்வமுள்ள ஸமுத்திரம் கூட உன்னை மதிக்கின்றதோ, அந்த உன்னுடைய பாதங்களையே வணங்குகின்றேன். ச

வெள்ளையர்களுமில்லை, கருப்பு மனிதர்களுமில்லை. அந்த தேசத்துக்காரர்கள் எல்லோரும் ஏறி வந்து இறங்கியும் போய்விட்டார்கள். நான் உன்னையே தான் அடைவேன். ரு

உன் கைங்கரியத்தின் பொருட்டு நான் எல்லா பேதங்களையும் மறந்து விடுவேன். அந்த உன் பெயரையே நான் தினந்தோறும் கேட்பேன், அதையே சொல்வேன். சூ

நான் உன் கைங்கரியமே செய்வேன். உன் மந்

திரத்தையே பாடுவேன். நான் என் மனதையும் உடலையும் உன்னிடமே ஸமர்ப்பிக்கிறேன். ௭

## லோகமான்ய திலகரின் ஸந்தேசம் (தூது)

நான் தேசம் முன்னேற்ற மடையும் என்ற நம்பிக்கையினால் கஷ்டத்தை ஸுகமாகவும், தைரியமாகவும் சாந்தமாகவும் ஸகிப்பேன். ௧

நம் பின்னோர்களுக்கு வழி காட்டியா யிருக்கட்டு மென்று நான் (சிவாஜிபோன்ற) முன்னோர்களின் புண்ய மஹோத்ஸவங்களை ஜனங்களுக்கு உண்மையாய் கர்ஜித்தேன். நீங்கள் இந்த நியமத்துடன் நடவுங்கள். ௨

சிவாஜியின் உத்ஸவத்தை ஸ்தாபித்தேன். அது இன்னும் தக்க உன்னத ஸ்திதிக்கு வரவில்லை. நான் கையி லெடுத்த காரியங்களை நீங்கள் ஒழுங்காய் முன்னேற்றுங்கள். ௩

தேசத்திற்கு இடைவிடாது கைங்கரியம் செய்யுங்கள். அந்நிய நாட்டு வஸ்துக்களை விலக்குங்கள். அவை யில்லாமல் மரணம் ஏற்படுமானாலும் அதை கைப்பற்றுங்கள். இது தான் எல்லோருக்கும் என்னுடைய செய்தி. இந்த வழியில் தைரியமாய் நடவுங்கள். ௪

## நமது தேசம்.

இந்தியா நமது தேசம். நாம் அதன் நன்மையை அவசியம் விரும்புவோம். அதற்காக நாம் ஏதாவது செய்து கொண்டே போவோம். ௧

இந்தியா நமது ஜன்ம பூமி. நாம் அதனிடத்தில் மிகவும் கடன்பட்டிருக்கிறோம். அதை தீர்ப்பதற்காக நாம் ஏதாவது செய்து. ௨

துக்கத்தை உண்டு பண்ணுகிற இந்தியாவின் தாழ்ந்த ஸ்திதியைப் பற்றி நாம் ஏன் கண்ணீர்விடமாட்டோம். அதை நீக்குவதற்காக நாம்ஏதாவது செய்து.

தர்மத்திலும், கல்வியிலும், பணத்திலும் இந்தியா உன்னத நிலமையை அடையட்டும். அந்த உன்னத ஸ்திதிக்கு வேண்டிய வழியில் நாம் ஏதாவது செய்து. ௪

உலகத்தை உத்தாரணம் செய்வதற்காக ஸ்ரீ கிருஷ்ணன் சிறையில் பிறந்தான். அப்படி யிருக்க நாம் ஏன் பயப்பட வேண்டும். நாம் சிறைக்கும் போவோம். ஏதாவது செய்து. ௫

இதற்காக என்ன கஷ்டம் வந்தாலும் எல்லாவற்றையும் சகிப்போம். அழிந்து போனாலும் போவோம்; ஏதாவது செய்து. ௬

ஸ்வாமி ஸத்யதேவர்.

## வைஷ்ணவன் யார்?

(மகாத்மா காந்தி யடிகளுக்கு மிகவும் பிரியமான இனிய பாட்டு.)

எவன் பிறருடைய துக்கத்தை அறிந்து அவருக்கு உபகாரம் செய்தபோதிலும் மனதில் கர்வம் கொள்ள மாட்டானோ அவனேயே வைஷ்ணவன் என்று சொல்ல வேண்டும். க

ஜகத்தில் எவன் எல்லோரையும் வணங்குவானோ, எவன் யாரையும் நிந்திக்கமாட்டானோ, வாக்கு, கச்சம், மனது இவைகளை சலிக்காமல் வைத்துக்கொண்டிருப்பானோ, அவனுடைய தாயே புகழத்தக்கவள் அவனேயே வைஷ்ணவன். உ

எவன் எல்லோரையும் ஸமமாகப் பார்ப்பானோ, எவன் அதிக ஆசையை தள்ளுவானோ, எவன் பரஸ்த்ரீகளை தன் தாயாக அறிவானோ, எவன் தனது நாக்கால் ஒருபோதும் பொய் பேச மாட்டானோ, எவன் பிறருடைய பொருளை கையால் தொடவும் மாட்டானோ, அவனேயே. ௩

எவனை மோகமும், மாயையும் அண்டாதோ, எவனுடைய மனதில் திடமாய் பற்றுத லின்மை குடிகொண்டிருக்குமோ, எவன் பகவானுடைய பெயரைக் கேட்டதுமே அதில் ஆழ்ந்து விடுவானோ, அவனுடைய சரீரத்தில் எல்லா புண்ணிய தீர்த்தங்களும் குடி கொண்டிருக்கும். அவனேயே வைஷ்ணவன். ச

எவன் லோப மில்லாமலும் கபட மில்லாமலும் இருப்பானோ, எவன் காமத்தையும், கோபத்தையும்

விட்டொழித்திருப்பானே, அப்பேர்ப் பட்டவனுடைய தரிசனம் கிடைத்தாலே எழுபத்தி யொன்று தலைமுறை கரை யேறிவிடும். ரு

நரஸிம்மேஹத்தா.

---

## நமோ ஹிந்துஸ்தான்.

மிகவும் கௌரவம் பொருந்திய ஏ வாக்கே, இன்று ஹிந்துஸ்தானத்தைப் பற்றிப்பாடு. பெரியஸபைகளை வசியம் செய்யக்கூடிய ஏ வாக்கே, இன்று ஹிந்துஸ்தானத்தைப்பற்றிப்பாடு. பராக்ரமம், ஐசுவர்யம், கீர்த்தி இவையினால்நிரம்பிய அந்தப் பெயரைப்பாடு. வங்காளம்,பீஹாரம், அயோத்யா,ஒரிஸா,சென்னை,மஹாராஷ்ட்ரம், குஜராத், நேபாளம், பஞ்சாப், ராஜபுதானம்;ஹிந்து,பார்ஸி, ஜைனர், கிருஸ்தவர், ஸிக்கியர், மஹம்மதியர் நீங்கள் எல்லோரும் எல்லா பாஷையிலும் இந்தியாவுக்கு வந்தனம் என்று பாடுங்கள். ஹிந்துக்கள், ஸிக்கியர், மஹம்மதியர் வஸிக்கும் இந்தியாவுக்கு ஜயமுண்டாகுக. இந்தியாவிற்கு வந்தனம்.

பேதமாகிற சத்துருவை நசிக்கக் கூடிய வாக்கே, இன்று ஒத்துமைப் பாட்டைப் பாடு. மிக பலத்தை யுண்டு பண்ணக் கூடிய வாக்கே இன்று ஒற்றுமை உண்டு பண்ணக் கூடிய பாட்டைப் பாடு. துக்கம், சௌக்கியம், நேசம், லக்ஷியம் இவைகளில் உடல், மனது, ஆவியை செலுத்துங்கள். வங்காளம் பீஹாரம் ..................................................

ஹிந்து பார்ஸி......இந்தியாவிற்கு வந்தனமென்று பாடுங்கள். உ

ஸகல ஜனங்களிடத்தும் ஊக்கம் உண்டு பண்ணக்கூடிய வாக்கே, இன்று புதிய ராகம்பாடு. பெரிய ஜாதிகளை அமைப்பிக்கும் சக்தியுடைய ஏ வாக்கே, இன்று புதிய ராகத்தைப் பாடு. காரிய லக்ஷியத்தைத் தூக்கு, கவனத்துடன் தர்மமாகிறசங்கைஊது, பங்க, விஹார,ஹிந்து, பார்ஸி..................................
இந்தியாவிற்கு வந்தனம் என்று பாடுங்கள்.

ஸ்ரீமதி ஸாாளாதேவி, சௌதராணீ.

---

## பாரத தேசம்.

அன்புள்ள பாரததேசத்திற்கு ஜயம். உலகத்தில் ...ப்பில்லாத அழகுடைய நமது அன்பான தேசத்திற்கு ஜயம். இது உலகத்தின் மகுடம், ஜகதீசனுக்கு மிகவும் பிரியமானது. உலகில் ஸௌபாக்யமுள்ள நல்ல தேசம். க

இது ஸ்வர்க்கத்திற்கு பிரதானம். பூமண்டலத்தின் புஷ்பம். மூன்று லோகத்திற்கும் மிகவும்பிரியமானது. அன்பிற்கு மூலம் (வேர்). எப்படி இரவிற்கு சந்திரன் திலகமோ அப்படியே இது அழகிய இயற்கையின் திலகம். உ

ஹிமய மலையின் வெண்மையான சிகரத்தையும், இடைவிடாத கல கல வென்று சப்தம் செய்து விளையாடும் கங்கையையும், சூரியனுடைய பிரதாபத்தால் அழகாகச்செய்யப்பட்ட அங்கங்களையும், தேஜோமயமான ஆடையையும் உடையவள். ந

கோடி யுகம் வரையில் உலகில் வாழ்ந்து, வாழ்க்கையின் சுலபமான அமிர்த ரஸத்தை குடித்துக்கொண்டு, சுகத்தைக் கொடுக்கக்கூடிய நல்ல செய்கைகளை செய்துகொண்டு எப்பொழுதும் ஸ்வதந்திரமாகஇருக்கட்டும். ௬

ஸ்ரீதர்மபட்டகர்.

---

## பாரத வீணை.

இன்று பாரத மாதா நமக்கு ஸ்வதந்திரமாகிற ராகத்தை பாடிக்கொண்டு அமிர்தத்தை ஊட்டுவது போல மதுரமான வீணையை வாசித்துக் கொண்டிருக்கிறாள். ௧

நாம் நூற்றாண்டுகளாக பாக்கியமாகிய சக்கரத்தில் இருந்தோம். அதிலிருந்து விடுவித்து நமக்கு ஸ்வாதீனத்தை படிப்பிக்கிறாள். ௨

பயங்கரமாகிய நம்பிக்கையின்மை யென்ற எந்த பிசாசு நம்மைப் பிடித்திருந்ததோ அதை தேசத்தின் ஸங்கீத பலத்தால் ஓட்டுகிறாள். ௩

பாரத மாதா இனிய குரலுடன் சக்தி மந்திரத்தைப் படிப்பித்துக்கொண் டிருக்கும்பொழுது நான் எப்படி ஏழ்மையான வார்த்தையைச் சொல்லுவேன். ௪

ஸத்யதேவர்.

---

## தர்ம சக்தி.

உடலி லிருந்து ஆவி பிரிந்தாலும் நீ தர்மத்தை விடாதே, பேச்சு உண்மையாய் இருக்கட்டும். இனிய வார்த்தைகளாக பேசு. க

எதுவரை அக்கினியில் அதனுடைய குணம் காயமாக இருக்கின்றதோ அதுவரையில் யானைக்கும் அதன் பக்கத்தில் போகவாவது சக்தியுண்டா? அது எப்பொழுது தனது குணத்தை யிழந்து சாம்பலாய்ப் போய்விடுகிறதோ அப்பொழுது எறும்பும் அதின் மேலே கூட ஏறிப்போகின்றது. உ

இது தர்மத்தின் மகிமை. நீ இதைப் பிடித்துக் கொண்டால் உனது சரீரத்திலிருந்து ஸிங்கம் புலி இவற்றினுடைய சக்திபோல சக்தி கிளம்பும். ந

எந்த மனிதன் குற்றங்களில் மூழ்கியிருப்பானே அவனே பயந்து நடப்பான். எவன் பகவானுக்குப் பிரியமுள்ளவனே அவன் சூரியனைப்போல் புறப்படுவான். ச

ஹ்ருதயத்தி லிருந்து எது வந்தாலும் உண்மையான பற்றுதலுடன் வரட்டும். இதை நீ உண்மையாக அறி. நான் சொல்லுவஷ்த மதி. ரு

பண மிருந்தால் அதனுல் தர்மத்தை செய்துவிடு. இல்லாவிட்டால் கடைசியில் ஸிகந்தருடைய இரண்டு கைகளும் வெருங் கையாகவே பாடையோடு போனது போலவே ஏற்படும். சு

ஸத்யதேவர்.

## கஜல்.

ஏ பாரத வாசிகளே, நீங்கள் எது வரையில் இப்படிக் குடித்துக் கொண்டிருப்பீர்கள்! இந்தியர்களே, இப்பொழுது கண்ணை விழித்துப் பாருங்கள். அன்னியர்கள் நூற்றுண்டுகளாக உங்கள் பொருளைக் கொள்ளை யடித்தும் உங்களை அடித்தார்கள். பாரதச்செல்வர்களே, ஏன் இம்மாதிரி கவனமின்றி விழுந்துகிடக்கின்றீர்கள்? உடம்பில் ஆடையில்லை. சாப்பிட அன்னமில்லை. ராஜாக்களின் பெயரையுடையவர்களே, நீங்கள் காவல் வேலை செய்கின்றீர்களே? ரத்தினங்கள் பதிக்கப்பட்ட அந்த அழகிய மாளிகைகள் எங்கே? வீண் கர்வமுள்ளவர்களே, அவைகள் போன இடத்தைக் காணுமே! பீஷ்மனுடையபெயரை உடையவர்களே, உங்களுடைய குழந்தைகள் இங்கும் அங்கும் அலைந்து திரிகின்றனவே, கத்துகின்றனவே. பாரதத்தின் கௌரவத்தைக் கொண்டவர்களே, உலகில் இப்பொழுது நமக்கு எங்கும் இட மில்லையே, எங்கேயும் திட்டுகின்றார்களே. மேன்மையான லக்ஷியத்தை யுடையவர்களே, நமது பரஸ்பர சண்டையும் கலஹமுமே நம்மை இந்த ஸ்திதிக்குக் கொண்டு வந்தது. அப்போதே நாம் அடிபட்டோம். விசாலமான மதத்தை யுடையவர்களே, இதுவே என்னுடையவேண்டுகோள். எவர்கள் தேச கைங்கர்யம் செய்கின்றார்களோ அவர்களே தர்மாத்மாக்கள்.

ஸத்யதேவர்.

**ஓம் தத் ஸத்.**